# தேவனுடைய எல்லையற்ற அறிவு:

## நமது தேவன் "கற்பது" இல்லை

*கி.பி. மூன்றாம் ஆயிரமாண்டின் உதயத்தை நெருங்குகின்ற தொழில் மயமாக்கப்பட்ட உலக கலாச்சாரங்கள் பலவற்றில் கல்விக்கான வலியுறுத்தலே செல்வாக்குப் பெற்ற அம்சங்களில் ஒன்றாக உள்ளது. நவீன நாகரீகத்தை எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சமாளிப்பதற்கு ஒருவர் தகவல் அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது வளர்கின்ற புரிந்து கொள்ளுதலாய் இருக்கின்றது. தகவல் அறிவின் வளர்ச்சி என்ற மேன்மை மிக்க நெடுஞ்சாலை மீது மனக் கிளர்ச்சி கொள்ள இதுவே காரண மாகின்றது.[1] தொடர் கல்வித் திட்டங்களின் விரிவாக்கமானது மக்கள் தங்களின் வருங்கால ஆண்டுகளில் புத்திக் கூர்மையில் வளர வேண்டும் என்ற அவர்களின் விருப்பத்திற்குச் சாட்சியம் அளிக்கின்றது.*

*அறிவதில் விருப்பம் என்ற தன்மையினால் மனித இயல்பு பண்புப் படுத்தப்படுவதாகக் காணப்படுகின்றது. இரண்டு வயதான ஒரு குழந்தை யின் செய்கைகள் செயல்பாட்டில் ஆர்வத்திற்கு நம்பக் கூடிய செயல் விளக்கமாய் இருக்கின்றன. ஐந்து வயதுக் குழந்தையின் அசைவில்லா ஊக்கமுடைய கேள்விகள் பல பெற்றோர்களைத் திகைக்கவும் சலிப்படைய வும் செய்கின்றன. அதிகம் கற்றுக் கொள்ளவும், செயல் வலிவுடன் செயலாற்றவும் தொழில் திறனுள்ளவர்கள் இருபது அல்லது முப்பது வருடங்களாக தங்களைக் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொள்வது பொதுவாகக் காணக் கூடியதாகும். அறிதலுக்கான தேவையில் இருந்தே கற்றுக் கொள்ளுதலின் இந்த வலியுறுத்தம் வளருகின்றது. இது, நாம் அறியத் தேவையானதை மற்றும் அறிய விரும்புவதை இன்னமும் அறியவில்லை என்ற நமது உணர்வறிவால் பெரிதும் தூண்டப்படுகின்றது. நாம் கற்றுக் கொள்ள முடியும் என்று நாம் நம்புவதால் முயற்சி தொடர்கின்றது. இவையெல்லாம் நமக்கு நன்கு பழக்கமானவை களேயாகும். உண்மையில், ஆராய்ந்தறியும், கண்டு பிடிக்கும் மற்றும் சாதனை புரியும் விருப்பங்கள் மனிதரின் உள்ளார்ந்த இயல்புகளாகக் காணப்படுகின்றன. இது மனித இனத்திற்கு இயல்பானதாகும்.*

*இருப்பினும், நமது அறிவின் திரட்சியினால் நாம் அதிகம் மயங்கி விடக் கூடும். அறிவின் உயர்தர விசேஷித்தப் பயன்பாட்டுடன் உள்ள தொழில் நுட்ப யுகமானது பல பயன்களைக் கொண்டு வந்துள்ளது. தெரிவிக்கப் பட்ட சாதனைகளின் புதுப்புனைவுத் திறனுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம்/*

வணக்கம் செலுத்துகின்றோம். மனித வளர்ச்சியின் இந்தத் திடீர்த் தாக்குதலுக்கு ஒரு ''கீழ்ப்'' பக்கம் ஏதாவது இருக்கின்றதா? ஆம்! "போலித்தனமான புத்திக் கூர்மை" என்ற மிக அதிகமாய் தொற்றுக் குணம் உடைய நோய் ஒன்று பரவிக் கொண்டுள்ளது. சகிக்க முடியாத முரட்டு குணம், தவறான சுய உறுதிப்பாடு, மற்றும் போலியான (தன்) நம்பிக்கை ஆகியவற்றுடன் ''எல்லாவற்றிற்குமான தர அளவை மனிதனே'' என்ற கடுமைகுன்றாத உறுதிப்பாடும் இணைந்துள்ளது. இந்த நிலைப்பாடானது "மனித மைய தெய்வீகத்துவம்" (anthropocentric divinity[2]) என்று அழைக்கப் படக் கூடும். இது மனித மனப்பான்மையில் உள்ள வலிவுமிக்க மாபெரும் குறைவை மறைக்கின்றது. நமது எல்லா உள்கண்ணோட்டங்களுடனும் கூட நம்மில் பலர், நமக்கு மேலே தொலைதூரத்தில் தெளிவற்றுத் தெரியும் தேவனுக்கு முன்பாக நமது புத்திக் கூர்மை என்பது பிறந்த குழந்தையின் நிலையில்தான் உள்ளது என்பதை ஒப்புக் கொள்ளுமளவுக்கு இன்னும் கற்றுக் கொள்ளவில்லை (1 கொரி. 1:18-25).

தேவனுடைய எங்கும் இருக்கும் தன்மையின் நெருங்கிய பின் விளைவாக இருப்பது தேவனுடைய எல்லையற்ற அறிவாகும்: தேவன் வரையறையற்ற, உலகளாவிய, முழுமையான அறிவைப் பெற்றுள்ளார்.[3] இது வேத வசனங்களில் வலியுறுத்தப்படுகின்றது. யோபு தமது "நண்பர்களிடத்தில்" தேவனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த பொழுது, ''அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து, வானங்களின் கீழ் இருக்கிறதையெல்லாம் காண்கிறார்'' (யோபு 28:24) என்று கூறினார். நீதிமொழிகளின் ஞானமுள்ள மனிதர், "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலு மிருந்து, நல்லோரையும், தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது" (நீதி. 15:3) என்று கூறினார். தேவனுடைய எல்லையற்ற அறிவின் இளைத்தல்கள் பலவாக உள்ளன. பல கேள்விகள் எழுப்பப்படலாம். விளக்கத்தின் மூலமாக அந்தக் கேள்விகளில் சிலவற்றை கவனிப்போம்.

## இது எழுப்புகின்ற கேள்விகள்

"தேவன் எவ்விதம் அறிகிறார்?" என்பது அடிக்கடி எழுப்பப்படுகின்ற கேள்வியாகும். எல்லையற்ற அறிவும் எங்கும் இருத்தலும் நெருங்கிய பின்விளைவு கொண்டவை என்று நாம் கூறியுள்ளோம். கதை சொல்பவர் ஒருவரை நோக்கி யாரேனும் ஒருவர், "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்பதை நீங்கள் எப்பொழுதாவது கேட்டிருக்கின்றீர்களா? "நான் அங்கிருந்தேன்'' என்பதே பெரும்பாலும் எதிர்க்குரலான பதிலாய் இருக்கின்றது. தேவனிடத்திலும் எல்லையற்ற அளவுக்கு இதுபோன்றுதான் உள்ளது. அவர் எல்லா இடத்திலும்/ஒவ்வொரு இடத்திலும் இருப்பதால் அவர் அறிகின்றார். இருப்பினும், ஒரு நிருபரைப் போல உண்மைகளைச் சேகரிப்பதால் எல்லாவற்றையும் தேவன் அறிகின்றார் என்று ஒருவர் முடிவு செய்யக் கூடாது. நாம் மனிதத்துவத்தை அல்ல, ஆனால் தேவனுடைய இயல்பைப் பற்றிக் கற்கின்றோம் என்பதை நினைவில் வையுங்கள். தேவன் இருத்தல் என்பதை எப்படித் தம் இயல்பாகக் கொண்டுள்ளாரோ,

*அப்படியே, அறிதல் என்பதையும் தம் இயல்பாகக் கொண்டுள்ளார். தேவன் இருக்கத் தொடங்குவதில்லை; அவர் ஏற்கனவே இருக்கின்றார். தேவன் கற்பதில்லை; அவர் ஏற்கனவே அறிந்துள்ளார். தேவன் எவ்விதம் அறிகிறார் என்பதை நாம் காண்பதற்கு அவருடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மையானது தர்க்கரீதியாக நமக்கு உதவுகின்றது.*

*"எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாவற்றையுமே தேவன் உண்மையிலேயே அறிந்திருக்கின்றாரா?" என்பது சில வேளைகளில் கேட்கப்படும் இன்னொரு கேள்வியாக உள்ளது. "அவ்விதமாகவே நான் நம்புகின்றேன், ஏனென்றால் அவர் ஒவ்வொன்றையும் அறிந்திராதிருந்தால், அவர் அறியாத ஒரு விஷயம் அவரது முடிவுக்கு ஏதுவாகிவிடும், இவ்விதமாக அவரை தேவனாயிருப்பதிலிருந்து நீக்கிப் போடும்" என்று கூறுவதே உடனடியான மனத் தூண்டுதலாக உள்ளது. இந்தக் கேள்விக்கு மிகவும் அதிக எச்சரிக்கையுள்ள பதில் தேவைப் படுகின்றது. "அறிதல்" என்ற சொற்றொடர் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றது என்பது பற்றிய கவனமும் இதில் உள்ளடங்குகின்றது.[4]*

*தேவன் தம்மைப் பற்றி உள்ளாக அறிகின்றார் அவர் தம்மைப் பற்றிய முழுமையான அறிவுடையவராக இருக்கின்றார் (1 யோவா. 1:5). மேலும் அவர் தமக்குப் புறம்பேயுள்ள அனைத்தையும் அதாவது மனிதர்கள் உட்படத் தமது படைப்புகள் யாவற்றையும் (யோபு 34:21) அறிகின்றார். இந்த எல்லையற்ற அறிவானது நமது உள்ளான இயல்புகளுக்குள் ஊடுருவிப் பாய்கின்றது. நம்முடைய நினைவுகளைக் கூட தேவன் அறிந்திருக்கிறார் என்று சங்கீதக்காரர் கதறினார் (சங். 139:2). ஆம், தேவன் எவ்வித விதிவிலக்குமின்றி ஒவ்வொன்றையும் அறிகின்றார்.*

*இதுவரையிலும் கேள்விகள் தேவன் எப்படி அறிகின்றார், எந்த அளவுக்கு அறிகின்றார் என்பவை பற்றி கவனம் செலுத்தின. வேறு வகையான கேள்வியொன்றும் அடிக்கடி எழும்புகின்றது: "ஒருவேளை ... ஆகியிருந்தால் தேவன் என்ன நடக்கும் என்று அறிந்துள்ளாரா?" இந்தக் கேள்வியானது எதிர்காலத்தைப் பற்றியது என்பதை நினைவுகூருதலே இதற்குப் பதில் அளிப்பதற்கான திறவுகோலாகும். நிகழ்வின் ஓட்டத்தை மாற்றக்கூடிய, இன்னமும் நடந்திராத சில சார்பு நிகழ்ச்சிகளை இது குறிப்பிடுகின்றது. இது, எதிர்பாராமல் அதாவது வியப்படையக் கூடிய வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று நினைக்கும் மனிதர்களால் கேட்கப்படுகின்றது. இருப்பினும், தேவன் ஒருக்காலும் வியப்படைவதில்லை. சார்பு நிகழ்வுகள் கடந்த காலம், நிகழ் காலம் அல்லது எதிர்காலம் இதில் எப்பொழுது நடந்தாலும் தேவன் அதன் விளைவுகளை அறிந்துள்ளார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், "ஒருவேளை ... ஆகியிருந்தால் என்ன நடந்திருக்கும்?" என்பதைத் தேவன் அறிந்திருந்துள்ளார், மற்றும் "ஒருவேளை ... ஆகியிருந்தால் என்ன நடக்கும்?" என்பதையும் அவர் அறிந்துள்ளார். கோட்பாட்டளவிலானது உண்மையானால் எப்படி ஆகியிருந்திருக்கும் என்பதைக் கூட அவர் அறிந்துள்ளார் (மத். 11:21, 22). இது அவரது எல்லையற்ற அறிவின் தவிர்க்க முடியாத விளைவாக இருக்கின்றது.*

*தேவனுடைய எங்கும் நிறைந்திருக்கும் தன்மை என்பது நித்தியம் முழுவதிலும் ஒரே வேளையில் அவர் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறார் என்பதாக உள்ளது; அவரது எல்லையற்ற அறிவு என்பது நித்தியம் முழுவதிலும் ஒவ்வொரு இடத்திலும் நடப்பது பற்றிய அவரது ஒரே வேளையில் அறியும் அறிவாக உள்ளது. மனிதர்களின் இந்தக் கண்ணோட்டக் கருத்திலிருந்து தேவன் ஒவ்வொன்றையும் அறிந்தார், அவர் ஒவ்வொன்றையும் அறிகின்றார், மற்றும் அவர் ஒவ்வொன்றையும் அறிவார் என்று நாம் கூறுகின்றோம். இதுவே நமக்கு வேதாகமத்தின் மொழி நடையிலும் கூறப்படுகின்றது. தேவனுடைய கண்ணோட்டத்தின் கருத்தானது காலமற்றதாகவும், அண்டம் தழுவியதாகவும் உள்ளது. அவருக்கு, கடந்த மற்றும் எதிர்காலங்கள் ஆகியவை நிகழ்காலமாக மட்டுமே உள்ளன. அவரது இருத்தல், அவரது பிரசன்னம், அவரது அறிவு ஆகியவை ஒரே வேளையில் நமது காலத்திலும் நித்தியத்திலும் இருக்கின்றன. "ஒருவேளை" என்ற வினாக்கள் யாவும் தவறான தர்க்க அடிப்படையிலேயே எழுகின்றன என்பதையே இவை யாவும் அர்த்தப் படுத்துகின்றன. புரிந்து கொள்ளுதலில் நமக்குள்ள குறைப்பாட்டினாலேயே இவைகள் வளர்ந்தேறுகின்றன.*

## இது எழுப்புகின்ற போராட்டங்கள்

*தேவனுடைய இயல்பின் எல்லாம் அறிந்த முகப்புடன் நமது போராட்டமானது பல காரணங்களினால் கடினமானதாகின்றது. (1) தேவனும் நாமும் புத்தி கூர்மையில் மாறுபட்ட அளவீடுகளில் இருக்கின்றோம் (ஏசா. 55:8, 9). (2) தேவன் தம்மைத் தாமே வெளிப்படுத்தினாலன்றி, அறியப்படாதவராகவே இருக்கின்றார், மற்றும் அவரது வெளிப்படுத்துதல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், வரையறைக்குட்பட்டதாகவும் இருக்கின்றது (உபா. 29:29). (3) தேவன் கொடுத்துள்ள வெளிப்பாடுகள் கூட, போதுமானவைகளாய் இருந்தாலும் (2 பேது. 1:3), புரிந்து கொள்ள அடிக்கடி கடினமானதாக உள்ளது (2 பேது. 3:15, 16). (4) இந்த பூமியில் நாம் காலத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கின்றோம், எனவே உடனடியானவைகளை நாம் நிறைவானவைகளாய்க் காணும்படி நோக்கிக் கொள்கின்றோம் (யாக். 4:13-16). (5) மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், நாம் நமது புரிந்து கொள்வதில் எல்லைக்குட்பட்டவர்களாக மட்டும் இருப்பதில்லை; மேலும் நாம் நமது வாழ்வில் பாவம் என்பதின் குறைபாடு உள்ளவர்களாகவும் இருக்கின்றோம் (ரோமர் 3:23).*

*இந்தத் தடைகள் நம்மை நம்பிக்கையின்மைக்கு வழி நடத்தலாம். நாம் மேற்கொள்ளப்பட்டவர்களாக மற்றும் மனவலிமை இழந்தவர்களாக உணரலாம். நமக்கு முன் முதலாவதாகத் தோற்றம் அளிக்கின்ற தடையானது வெற்றி கொள்வதற்கு மிக உயரமானதாகக் காணப்படலாம். ''தேவன் 'முற்றிலுமாக மற்றவர்' என்றால் நான் எப்படி அவருடன் தொடர்பு கொள்ளத் தொடங்குவது?" இரண்டாவது இடர்ப்பாடானது "நான் தேவனைத் தேடுவதைத் தேர்ந்து கொண்டால், அவரது வெளிப்*

படுத்துதல் தேர்ந்தெடுத்ததாகவும் வரையறைக்குட்பட்டதாகவும் இருக்கையில் நான் எங்கு திரும்புவது?" என்ற கேள்வியை எழுப்புகின்றது. மூன்றாவது இடர்ப்பாடானது இன்னொரு பெரும் வருத்தம் உடையதாய் இருக்கின்றது: "வெளிப்படுத்துதலைப் புரிந்து கொள்வதே கடினம் என்று நிரூபிக்கப்பட்டிருந்தால், அவரது வெளிப்பாட்டில் நான் அவரைத்தான் கண்டறிந்தேன் என்பதை நான் எப்படி நிச்சயப்படுத்திக் கொள்வேன்." நான்காவது தடையானது, "உடனடியானது இப்போதுள்ளது நிறைவான தல்ல என்றால், நாளுக்கு நாள் நான் எனது வாழ்வை எவ்விதத்தில் மதிப்பிடவும், இயக்கவும் முடியும்?" என்ற நடைமுறைக் கேள்வியை எழுப்புகின்றது. கடைசியான தடையானது ஒரு தீவிரமான பிரச்சனையை முன்னிறுத்துகின்றது: "நான் பாவம் நிறைந்தவனாயிருப்பதால், எந்த அடிப்படையில் நான் ஏதேனும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள முடியும்? இனி வருவதைப் பற்றி ஒன்றும் கூறுவதற்கின்றி, எப்பொழுதும் இருக்கிறவரும், என்னைப் பற்றி உள்ளும் புறம்பும் அறிந்தவராயிருக் கிறவருமான தேவனுக்கு முன்பாக இப்பொழுது பிழைத்திருக்கச் சாத்தியக் கூறு உள்ளதா?" இவைகள் தீவிரமான கேள்விகளாய் இருக்கின்றன. குறிப்பிடத் தக்க பெரும்பாலான கேள்விகளைப் போலவே, இவைகளுக் கும் தொடர்பற்ற விதத்தில் பதில் அளிக்கப்பட முடியாது. இருப்பினும், இவைகளுக்குப் பதில் அளிக்கப்பட முடியும். மேற்கண்டவை போன்ற வாழ்வின் முக்கியமான கேள்விகளுக்குத் தீர்வு காண நாம் கடும் முயற்சி செய்கின்றோம்.

நாம் தேவனுடைய எல்லையற்ற அறிவு பற்றிக் கற்றுக் கொள்கையில், அவருடைய எல்லையற்ற அறிவானது அவருடைய சித்தத்திற்குச் சமானமானதாயிருப்பதில்லை என்பதை நினைவுகூருவதே நமக்கு முன்பாக உள்ள ஒரு அறைகூவல் ஆகும். இந்த மாறுபாடு இப்பொழுது எழுப்பப் பட்ட வினாக்கள் சிலவற்றால் எழுந்த இறுக்கத்தை ஒழித்துப் போடுகின்றது. தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கின்றார் என்ற உண்மையானது அவை யாவும் நடக்க வேண்டும் என்று அவர் சித்தம் கொண்டுள்ளார் என்று அர்த்தப்படுத்துவதில்லை. தெய்வீகத்துடனான மனித ஒப்பீடுகள் வரையறைக்குட்பட்டவைகளாக உள்ளன, ஆனால் நாம் புரிந்து கொள்ள உதவியாக இந்த நடைமுறையைப் போக்கிடமாகக் கொண்டுள்ளோம்.

முடிவற்ற, மற்றும் உலகளாவிய அடிப்படையில் தேவன், மக்கள் யாவரும் சரீர வியாதிகள் தங்களுக்கு ஏற்படுத்துவதைக் காட்டிலும் மிக அதிகமாகக் கேட்டுக்குள்ளாக்கும் வழியில் இயலாதவர்களாய் இருப்பதை அறிகின்றார் (ஏசா. 64:6); ஆனால், "ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி" (2 பேது. 3:9) என வாசிக்கிறோம். எனவே, அவர் கல்வி புகட்டி (யோவான் 6:45), எச்சரித்து (லூக். 12:4, 5), அழிவிலிருந்து மீட்பதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் அளிக்கின்றார் (யோவா. 3:16).

## இது அளிக்கின்ற விளக்கம்

இப்பொழுது நாம் வேதவசனத்தில் உள்ள தீர்க்கதரிசனங்களைக் கவனிக்கத் திரும்புவோம். முதலாவதாக, தீர்க்கதரிசனமானது வேதாகமத்திலிருந்து நீக்கப்பட்டால் அது (வேதாகமம்) நேர்ப்பொருளில் ஒழிந்து போகுமளவுக்குத் தீர்க்கதரிசனங்கள் வேதாகமத்தில் ஊடுருவியுள்ளன. வேதாகமத்தின் பெரும் பகுதியானது அதன் பிறகு அறிவிற்கு ஏற்புடையதாகவோ, இசைவானதாகவோ அல்லது படிக்கக் கூடியதாகவோ கூட இருக்காது. பெரிய மற்றும் சிறிய தீர்க்கதரிசனங்கள், வரலாற்றுப் புத்தகங்களில் விரிவாகப் பரவியுள்ள தீர்க்கதரிசனங்கள், இயேசுவால் கூறப்பட்ட மற்றும் போதிக்கப்பட்ட ஏராளமான தீர்க்கதரிசனங்கள், மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் ஆகியவை இல்லாத ஒரு வேதாகமத்தைக் கற்பனை செய்து பாருங்கள். வேத வசனத்தின் குறைவுபடாத இந்தப் பகுதிகள் இன்றி, வேதாகமம் வேதாகமமாக இருக்காது. இதிலிருந்து நாம் எதை உய்த்துணர முடிகின்றது? வேதாகமமானது அதன் பரந்துள்ள தீர்க்கதரிசன அளவீட்டில், தேவனுடைய எல்லையற்ற அறிவின் ஒரு கண்ணாடியாக உள்ளது. தீர்க்கதரிசனமானது முன்னுரைத்தலுக்கு உட்படாதிருந்தாலும் இது உண்மையாய் இருக்கின்றது. ஒவ்வொரு தீர்க்கதரிசனமும் அதன் நிறைவேற்றம் வரையிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் இது உண்மையாய் இருக்காது. தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமானது தீர்க்கதரிசியின் நம்பகத் தன்மையை நிலைநாட்டுகின்றது என்று நமக்குத் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளதே (உபா. 18:22).


வேதாகமத்தின் பல தீர்க்கதரிசனங்கள் இன்னமும் நிறைவேறவில்லை. அவைகளில் சில இன்னமும் வரலாற்றில் நிறைவேற வேண்டியுள்ளன; அவைகளில் பல, காலத்தின் முடிவைச் சுட்டிக்காட்டுகின்றன. அப்படியானால், வேதாகம தீர்க்கதரிசனமானது தேவனுடைய எல்லையற்ற அறிவை எவ்விதம் விளக்கப்படுத்துகின்றது? வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் கூறப்பட்ட பல தீர்க்கதரிசனங்கள் பெரும்பாலும் உடனடியாக நிறைவேறின; மற்றவை ஒரு குறுகிய காலத்தில் நடந்தேறின; மற்றும் இன்னும் மற்ற சில தீர்க்கதரிசனங்கள் சில நூற்றாண்டுகள் காத்திருப்புக்குப் பின்பு நடந்தேறின.[5]

வேதாகமத்தில் உள்ள நிறைவேறிய தீர்க்கதரிசனமானது வரலாற்றின் எல்லையைச் சார்ந்துள்ள மனிதர்களால் அழைக்கப்படுகின்றபடி, தேவனுடைய முன்னறிவிற்கு உன்னதமான உதாரணமாக உள்ளது. "முன்னறிவு" என்றால் "முன்பாகவே அல்லது முன் கூட்டியே அறிதல்; முன்னதாகவே அறிவை பெற்றிருத்தல்" என்று அர்த்தப்படுகின்றது. இந்த முன்னறிவானது நிகழ்ச்சிகளின் ''சாதாரண'' ஒழுங்கமைவை உண்மையில் திருப்பி விடுகின்றது. ஒரு நிகழ்ச்சியைப் பற்றிய நமது அறிவானது அந்த நிகழ்ச்சி நடந்த பின்பு தான் வருகின்றது. நாம் அதை முன்னதாகவே அறிந்திருப்பதாக நாம் நினைக்கலாம். சில நிகழ்ச்சி நடக்கும் என்பதில் நாம் நிச்சயமாய் இருக்கலாம். தவறாகி விடுதல் என்பது சங்கடப்படுத்துவதாக இருப்பதில்லையா? சில வேளைகளில் நாம் அப்படியாகிவிடுகின்றோம், நீங்கள்

*அறிவீர்களா!*

*தேவன் தவறுகிறவராய் இருப்பதில்லை. வரலாற்றில் (காலத்தில்) என்ன நடந்துள்ளது, நடக்கின்றது, மற்றும் நடக்கும் என்பவைகளை அவர் நித்தியத்தில் அறிந்துள்ளார். நாமும் வேதாகம எழுத்தாளர்களும் தேவனுடைய முன்னறிவு என்று அழைக்கும் விஷயமானது, வரையறுத்தலுக்குட் பட்ட வழியிலான அவரது வரையறையற்ற மனம் ஆகும் (அப். 2:23; ரோமர் 11:2அ). இது வேறு வழியில் இருக்க முடிந்திராது. தேவனை நாம் அவரது முழுமைத் தன்மையிலும், அவரது நோக்கிலும் "காண" வேண்டும் என்று தேவன் விரும்பியிருந்தால், அவர் உறுதியாகவே நமக்கு அந்தக் கண்ணோட்டத்தை அளித்திருப்பார்; ஆனால் நாம் இப்பொழுது பாவம் நிறைந்த மனிதர்களாய் இருப்பது போல் இருக்க மாட்டோம்.*

*தேவனுடைய எல்லையற்ற அறிவைக் காண்பதற்குப் பின்வரும் திட்ட வரைவானது நமக்கு உதவி செய்யக் கூடும்:*




*இவ்வரைபடத்தின் வெளிப்புற எல்லைக் கோடானது நித்தியம் வரையறைக்குட்பட்டது என்று மறைவாக உணர்த்துவதில்லை. உட்புறம் உள்ள செவ்வகமானது ஒவ்வொன்றும் அழியக் கூடியதே, அதாவது காலத்தினால் கட்டப்பட்டுள்ளதே என்பதைப் பிரதிநிதித்துவப் படுத்து கின்றது. தேவனுடைய பிரசன்னம் தவிர, உட்புறச் செவ்வகத்தினுள் அட்டவணையிடப்பட்டுள்ள ஒவ்வொன்றும் முடிவுக்கு வரும். அவர், காலத்திலும் நித்தியத்திலும் ஒரே வேளையில் இருக்கின்றார். காலங்கள் முடிகின்ற பொழுது, இரட்சிக்கப்பட்டவர்களும் தேவனும் நித்தியத்தில் நித்திய காலமாக இருப்பார்கள். தேவன் தமது எங்கும் நிறைந்துள்ள தன்மை மற்றும் எல்லையற்ற அறிவு ஆகியவற்றினால் எல்லாவற்றையும் ''காண்கின்றார்.'' எல்லாவற்றையும் ''காண்பது'' என்பது நமக்குக் கடினமானதாக, உண்மையில் நம்மால் இயலாததாக உள்ளது. இம்மா*

*பெரும் வெளித்தோற்றமானது நாம் பவுலின் பின்வரும் ஆச்சரியக் கூற்றை பாராட்டும்படி செய்கின்றது:*

> *ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவை கள்! … சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமென் (ரோமர் 11:33-36).*

---

*குறிப்புகள்*

[1]Philip Elmer-DeWitt, "Battle for the Soul of the Internet," *Time* 144 (July 1994): 50-55. [2]*Anthropos என்பது ஆண்பாலுக்குரிய கிரேக்கச் சொல்லாகும்.* "Anthropocentric" *என்றால் ''மனிதனை மையமாய்க் கொண்ட'' என்று அர்த்தப்படுகின்றது. "தெய்வீகத்துவம்" என்பது தெய்வீகம் அல்லது தேவத்துவம் சார்ந்தது. மனிதன் எல்லாவற்றிற்கும் மையமாக ஆனதினால் தன் சுய கண்களுக்கே அவன் தேவனாக பாவிக்கின்றான்.* [3]E. H. Ijams, *The Reality of God* (Nashville: Williams, 1978), 12, 120. [4]*இந்த விசாரிப்பில் நாம் எப்படி அறிகிறோம் என்பது பற்றி நாம் கவனம் செலுத்துவதில்லை. நாம் பெறுகின்ற அறிவில் சில நமது அனுபவத்துடன் தொடர்புடையதாக உள்ளது.* [5]*1 இரா. 11:29-32/12:15, 20; 1 இரா. 21:23; 2 இரா. 9:31-37/2 இரா. 19:20-37; ஏசா. 40:3/மத். 3:3; ஏசா. 42:1-4/மத். 12:18-21; யோவே. 2:28-32/அப். 2:16-21; முதலியன.*